Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

கடர் : 38
கதிர் : 335

வெள்ளிக்கிழமை 27 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 10 ஆம் நாள் — வள்ளுவர் ஆண்டு 2054

யாழ். கீரிமலையிலுள்ள

# ஜனாதிபதி மாளிகை இன்னும் கைமாறவில்லை

## யாழ். எம்.பி.க்களுடன் ஆலோசித்தே அது தொடர்பில் இறுதி முடிவாம்

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 27**

**வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜனாதிபதி மாளிகை இன்னமும் தனியார் பல்கலைக் கழகத்துக்கோ அல்லது வேறெந்தத் தரப்புக்குமோ கைய ளிக்கப்படவில்லை என்று நகர அபிவிருத்தி அதிகாரசபை யின் பணிப்பாளர் தெரிவித்தார்.** »11

விதிமீறலால் யாழில் மட்டும்

## தினமும் 200 பேர் பொலிஸ் பிடியில்

யாழ்ப்பாணம், ஒக். 27
யாழ்ப்பாணத்தில் நாளாந்தம் சராசரியாக 200 பேர் போக்குவரத்து விதிமீறலுக்காக பொலிஸாரால் பிடிக்கப்படுகின்றனர் »09

## போதைப்பாவனை பறிபோனது உயிர்!

யாழ்ப்பாணம், ஒக். 27
அதீத போதைப்பாவனை காரணமாக இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப் பாணம், சுன்னாகம் பொலிஸ் »11

## மேய்ச்சல் தரையை உடன் விடுவிக்குக

### முசலிப் பண்ணையாளர்கள் நேற்றுப் போராட்டம்

மன்னார், ஒக். 27
மன்னார், கட்டுக்கரைக் குளத்துக்குட்பட்ட புல்லறுத்தான் கண்டல் மேய்ச்சல்தரையை விடுவிக்குமாறு வலியுறுத்தி, நானாட் »11

திருட்டு மோ.சைக்கிள்களில் சென்று

## சங்கிலி அறுத்த இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 27
மோட்டார்சைக்கிள்களைத் திருடி அவற்றில் பயணித்து சங்கிலி, தாலிக்கொடி என்பவற்றை அபகரிக்கும் குழுவைச் சேர்ந்த இரண்டு பிர தான சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள னர். »09

## அடித்துச் சிதைக்கப்பட்ட இளைஞரின் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, ஒக். 27
கிளிநொச்சி, இராமநாதபுரம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மாயவனூர் பகுதியில், »11

## பிறர் கையாள்கையில் சுங்கத்தின் காணிகள்!

யாழ்ப்பாணம், ஒக். 27
வடக்கு மாகாணத்தில், சுங்கத் திணைக்களத்துக் குரிய காணிகள் பிறரால் கையாளப்படு »11

## சங்கிலி அறுத்தவர்களை விரட்டியடித்த இளம்தாய்

### மோட்டார்சைக்கிளைக் கைவிட்டு கொள்ளையர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 27
வீதியால் சென்றுகொண்டிருந்தபோது, தள்ளி விழுத்திவிட்டு சங்கிலியை அபகரித்தவர்களை இளம்தாய் ஒருவர் விரட்டிவிரட்டி அடித்த சம்பவம் கொடிகாமத்தில் இடம் »11

## தென்கொரியப் போர்க்கப்பல் நங்கூரமிட்டது கொழும்பில்!

கொழும்பு, ஒக். 27
றொக்ஸ் க்வாங்கெட்டோ என்ற தென்கொரிய கடற்படைக்கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நேற்று நங்கூரமிட்டுள்ளது. இந்தக் கப்பலில் »11

வவுனியா வடக்கில்

## பிரதேச செயலருக்கு எதிராக உண்ணாவிரதப்போராட்டம்

வவுனியா, ஒக். 27
வவுனியா வடக்குப் பிரதேச செயலரை இடமாற் றம் செய்யவேண்டும் உள்ளிட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா »11

வெளிநாட்டு ஆசைகாட்டி

## இணையத்தில் பண மோசடி!

### பல்கலை உத்தியோகத்தர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 27
வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து இணையத்தில் பணமோசடியில் ஈடுபட்ட, தெற் குப் பல்கலைக்கழகத்தின் பெண் உத்தி »11

கோத்தாபய சென்ற பின்னர்



## கூட்டமைப்பின் அழுத்தத்துக்கு அடிபணிகின்றதாம் அரசாங்கம்!

### ம.உ. ஆணைக்குழுவிடம் சுமணரத்ன தேரர் முறைப்பாடு

மட்டக்களப்பு, ஒக். 27
கோத்தாபய ராஜபக்ச ஆட்சி யில் இருந்து அகற்றப்பட்ட பின்னர், மட்டக்களப்பின் திவு லுப்பொத்தானையிலிருந்து சிங்கள மக்களை வெளியேற்ற முயற்சிகள் இடம்பெறுகின் றன. கூட்டமைப்பின் அழுத்தத் துக்கு அரசாங்கம் அடிபணிந் துள்ளது. இந்த விடயத்தில் இலங்கையின் மனித உரிமை கள் ஆணைக்குழு உடனடி »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களின் விருப்பப்படியே புதுச்சட்டங்கள் அறிமுகம்

## கூறுகிறார் மனுஷ நாணயக்கார



கொழும்பு, ஒக். 27

**நாட்டிலுள்ள முறைமையை மாற்றவேண்டுமென்றே மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடுகின்றனர். மக்கள் எதிர்பார்க்கும் முறைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே தற்காலத்துக்கேற்ற வகையில் புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.**

- இவ்வாறு ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் நிதி ஒழுக்கம் பேணப்பட்டாலேயே சர்வதேச நாணய நிதியம் உட்பட வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் பிற நாடுகள் எமது நாட்டின் பொருளாதார மீட்சிக்கு உதவ முன்வருவார்கள். அதற்கமையவே நிதி ஒழுக்கத்தைப் பேண அனைத்துத் துறைகளிலும் மாற்றம் ஏற்படுத்தப்படுகிறது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக வீழ்ச்சி கண்ட தொழில் முயற்சிகளை இனங்கண்டு அவற்றை மீண்டும் மீட்டெடுக்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

வரலாற்றில் அதிகளவிலான சட்டவிதிமுறைகளை நிறைவேற்றும் காலமாக இந்தக் காலகட்டத்தை குறிப்பிடலாம். மக்கள் எதிர்பார்க்கும் முறைமைகளில் அரசாங்கத்தை மறுசீரமைப்பதற்கு தற்காலத்துக்கு ஏற்ற புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் அவசியமே - என்றார். (ச-44)



# சட்டவிரோத மதுசாலைகள் ஏன் நடவடிக்கை இல்லை?

## ஒருங்கிணைப்புக்கூட்டத்தில் வடக்கு ஆளுநர் சீற்றம்

யாழ்ப்பாணம் . ஒக். 27

யாழ்.மாவட்டத்தில் காணப்படும் சட்டவிரோத மதுபானசாலைகளை உடன் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுதொடர்பிலான விவரங்கள் வரும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று துறைசார் அதிகாரிக்கு கடும் தொனியில் பணித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் .

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்டவிரோதமாக இயங்கும் மதுபானசாலைகள் தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

அதன்போது வடக்கு மாகாண ஆளுநர்,

சட்டவிரோத மதுபானசாலைகள் தொடர்பில் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை? அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன்மூலம் அரசாங்கத்துக்கு வருகின்ற வருமானத்தை இழக்கச் செய்கின்றீர்களா? ஒவ்வொரு முறையும் கூட்டத்தில் திணைக்களத்துக்கு பொறுப்பானவர் பங்கேற்று உரிய பதிலளிப்பதில்லை. உதவி அத்தியட்சகர் ஒருவரே கூட்டத்துக்கு வருகிறார். சட்டவிரோத மதுபானசாலைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு மதுவரித்திணைக்களத்திடமே உள்ளது. அதனை உடன் செயற்படுத்தவேண்டும். அடுத்த கூட்டத்தில் எத்தனை சட்டவிரோத மதுபான சாலைகளை கட்டுப்படுத்தி இருக்கிறீர்கள் என்ற விபரம் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று கடும் தொனியில் ஆளுநர் எச்சரித்தார். (ச-27-26-125)

## போதனா படுகொலை: யாழில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்திய இராணுவத்தால் கொடூரமான முறையில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டவர்களின் 36 ஆவது ஆண்டை நினைவுகூர்ந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் யாழ்.நகரின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சுவரொட்டிகளில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடமையிலிருந்தபோது படுகொலை செய்யப்பட்ட பதினெட்டுப் பேரின் ஒளிப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. (ச-66)

வெளிநாட்டுத் தொழிலாளரால்

## 3.5 பில்லியன் டொலர் இவ்வருடம் வருமானம்

கொழும்பு, ஒக். 27

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தொழிலாளர்களால் மாதாந்தம் 500 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கின்றது. இந்த வருடத்தில் மாத்திரம் அரசாங்கத்துக்கு 3.5 பில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து இதனை விட மிகக் குறைந்த கடன் தொகையே கிடைக்கவுள்ளது.

ஆயினும் இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் வலுப்பெற்றுள்ள நிலையில் மத்திய கிழக்கிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் தமது தொழில்களை இழக்கக் கூடிய வாய்ப்பும் உள்ளது. இதனால் மாதாந்தம் கிடைக்கும் 500 மில்லியன் டொலர் வருமானத்தில் வீழ்ச்சி உண்டாகும் - என்றார். (ச-இ)

# உயிரைப் பணயம் வைத்து பணியாற்றுகின்றார்களாம்

## யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

பொலிஸ் வேலை என்பது சில்லறைக் கடை போன்றது. பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டி வரும். மணல் கடத்தலை மாத்திரம் கண்காணித்துக்கொண்டிருக்கமுடியாது. சாதாரண மக்கள் என்ன பிரச்சினை என்றாலும் முதலில் நாடுவது பொலிஸைத்தான். நாங்கள் உயிரைப் பணயம் வைத்துத்தான் கடமையை செய்கின்றோம் என யாழ்ப்பாணப் பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் யரூல் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் சட்டவிரோதச்செயற்பாடுகளை கட்டுப்படுத்தல் தொடர்பில் ஆராயும்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இராணுவத்தை நிலை நிறுத்துவதற்காகவே பொலிஸார் மந்தகதியில் செயற்படுகிறார்கள். உங்களால் முடியாவிட்டால் மாகாணசபைக்கு பொலிஸ் அதிகாரத்தைத் தாருங்கள் என தெரிவித்த போது அதற்குப் பதிலளித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் யரூல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.பொலிஸார் பல்வேறுபட்ட பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். திருட்டுச் சம்பந்தமாக திருடனை கைதுசெய்ய முயன்றால் அவன் ஒளித்துவிடுவான். இப்படிப் பல சம்பவங்கள் உள்ளன. ஆனால் உயிரை துச்சம் என மதித்துத்தான் கடமையைச் செய்கின்றோம்.

"நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து ஏற்கக் கூடியது அல்ல. ஆளணிப் பற்றாக்குறை போன்ற பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் கடமையாற்றி வருகின்றோம். யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருமளவு குற்றங்களைக் கட்டுப்படுத்தக்கூடியதாக உள்ளது. 75 வீதமான குற்றங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றோம். பொலிஸார் மீது இவ்வாறான குற்றச்சாட்டுகளை சுமத்துவதை நீங்கள் நிறுத்த வேண்டும் எனவும் கோரினார்". (ஒ-26-125)

# வருட இறுதியில் திட்டத்தை எப்படிச் செயற்படுத்துவீர்கள்?

## ஆளுநர் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 27

விவசாயத் திணைக்களத்தால் இந்த ஆண்டுக்கான முன்மொழிவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது ஆண்டிறுதியில் திட்டம் ஒன்றை எப்படிச் செயற்படுத்தமுடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ் கேள்வி எழுப்பினார்.

அரசாங்க நிதியில் செயற்படுத்தப்படும் திட்டத்தை ஆண்டிறுதியில் அதனை நடைமுறைப்படுத்த அனுமதி கோரினால் எவ்வாறு அதைச் செயற்படுத்தமுடியும்? அவ்வாறு செயற்படுத்த முடியாது இது ஒரு நையாண்டியான விடயம் எதிர்காலத்தில் இவ்வாறு செயற்பட வேண்டாம் என கடுமையான தொனியில் அதிகாரிகளை எச்சரித்தார். (ஒ-26-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டங்களை ஆராய குழு நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 27

**யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள எட்டுத் திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு சி.வி.கே. சிவஞானம் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது நகர அபிவிருத்தி அதிகார சபையால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள 8 திட்டங்கள் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

குறித்த திட்டங்களுக்கான காணிகளை வழங்குவதற்கு அனுமதியளிக்குமாறு நிறுவனத்தின் பணிப்பாளர் கோரிக்கை விடுத்தபோது காணி வழங்குவதற்கு கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து குறித்த 8 திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் ஜனாதிபதியின் வடக்குக்கான இணைப்பாளர் மற்றும் பிரதேச செயலர்கள் அடங்கிய குழுவொன்று ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரால் நியமிக்கப்பட்டது.


(ச-27-26-125)

## யாழில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் முன்னெடுத்த திடீர் சுற்றிவளைப்பில் 140 கிலோ எடையுள்ள தடைசெய்யப்பட்ட மீன் பிடிவலைகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன. அவர்களுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள கடையில் தடை செய்யப்பட்ட 140 கிலோ எடையுள்ள வலையுடன், கடையின் உரிமையாளரையும் கைது செய்தனர்.

(ஒ-27-125)



## கண்நோய் பாதுகாப்பு யாழில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக். 27

கண்நோய் தற்போது வேகமாகப் பரவி வருவதையடுத்து அதனைத் தடுப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் யாழ்.மாநகரப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்கள் கூடும் இடங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், சந்தைகள் போன்றவற்றுக்கு சுகாதாரப் பிரிவினர் சென்று கண்நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கண்நோய் பரவாமல் இருப்பதற்கு மக்கள் உரிய சுகாதார ஒழுங்குமுறைகளை கடைப்பிடிக்கவேண்டும் என்றும் குணமடையும்வரை நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவினரால் அறிவுறுத்தப்படுகிறது.

(ச-17)

## வெங்காயத்தின் விலை சடுதியாக உயர்வு

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் சின்ன வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதுடன் அவற்றுக்கு கிராக்கியும் ஏற்பட்டுள்ளது என்று நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

சந்தைகளுக்கு போதியளவு சின்ன வெங்காயம் வந்து சேராதமையாலேயே அவற்றுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை பெரிய வெங்காயத்தின் விலையும் சடுதியாக உயர்வடைந்துள்ளது.

சந்தைகளில் தற்போது பெரிய வெங்காயம் கிலோ 270 ரூபாவாகவும் சின்ன வெங்காயம் கிலோ 320 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ச-17)

## தீர்மானத்தை நிறைவேற்றுங்கள் மன்னாரில் நேற்றுப்போராட்டம்

மன்னார், ஒக். 27




கட்டுக்கரைக் குளத்துக்கு உட்பட்ட புல்லறுத்தான்கண்டல் பகுதியை மேய்ச்சல் நிலமாக அறிவிக்கவேண்டும் எனக் கோரியும் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றக் கோரி கவனவீர்ப்புப் போராட்டம் மன்னார் மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று நடைபெற்றது.

நூற்றுக்கு மேற்பட்ட கால்நடை வளர்ப்போர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். இவர்கள் ஏந்தியிருந்த பதாகைகளில் 'பண முதலைகளே எமது மேய்ச்சல் நிலங்களை சூறையாடாதீர்கள்' 'பண்ணையாளர்களின் [illegible] நில் அடிக்காதே' பால் [illegible] நெய் குடிக்க ஆசை ஆனால் அவற்றை தரும் மிருகங்கள் மேய்வதற்காக நிலம் வழங்குவதில் ஏன் அசமந்தப் போக்கு' 'அரச அதிகாரிகளே எங்கே எங்கள் மேய்ச்சல் நிலம்' [illegible]

(ஒ-60)



# தினம் தெரியுமோ?

**இப்ப தியேட்டரில ஓடுற 'லியோ' படத்தைப் பார்த்த ஆக்கள் அதிலவாற 'நரபலி' மாதிரியான மூடநம்பிக்கையள் இப்ப இல்லை எண்டு கதைக்கினம். ஆனால் பகிடி என்னெண்டால் உதைவிட மோசமான மூடநம்பிக்கையள் இன்னமும் இஞ்சசுத்திக்கொண்டுதான் இருக்குது. அதுகள் எல்லாமே ஒளிவுமறைவா நடக்கிறதால வெளியால தெரியவாறது குறைவு.**

**மூண்டு மாசத்துக்கு முதல், வவுனியாவில 2 வயதுக் குழந்தையொண்டு வீட்டு முத்தத்தில விளையாடிக் கொண்டிருந்தது. திடீரெண்டு பார்த்தால் குழந்தையைக் காணேலை. வீட்டுக்காரர் குழந்தையைக் காணேலை எண்டு அந்தரிச்சு தேடிச்சினம். கொஞ்சநேரத்துக்குப் பிறகு தான் வீட்டு வளவுக்க இருந்த தண்ணித்தொட்டிக்குள்ள குழந்தை கிடக்கிறது தெரியவந்து. குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினவை. ஆனால் அங்க கொண்டுபோக 'பிள்ளை செத்துப்போச்சு' எண்டு சொல்லிட்டினம். அதுக்குப் பிறகு பிள்ளையை சுடலைக்குள்ள கொண்டுபோய் புதைச்சு அடக்கம் செய்திட்டு வந்திட்டினம். பிறகு பிள்ளையைப் புதைச்ச இடத்துக்கு அஞ்சலி செய்யவெண்டு போனவைக்கு. பெரிய அதிர்ச்சி. அங்க பிள்ளையைப் புதைச்ச இடத்தில மண் தோண்டுப்பட்டுக் கிடந்திருக்கு. உள்ளுக்க சவப்பெட்டி மட்டும் இருக்கு. ஆனால் குழந்தையின்ர சடலத்தைக் காணேலை. அங்கால இஞ்சாலையெல்லாம் தேடிப்பார்த்தும் அந்தக் குழந்தையின்ர 'பொடி' கிடைக்கேலை. பிறகு பொலிஸில போய் முறைப்பாடு செய்தவை. பேப்பரில விளம்பரமும் குடுத்துப் பார்த்தவை. இன்னமும் அந்தக் குழந்தையின்ர 'பொடி' எங்க போச்செண்ட மர்மம் தெரியவரவேயில்லை.**

**சரி இதுக்கும், மூடநம்பிக்கைக்கும் என்ன சம்பந்தம் எண்டு யோசிக்காதையுங்கோ. சம்பந்தம் இருக்கெண்டு அங்கத்தைச் சனம் உறுதியா நம்புது. இதுக்கு முதலும் இப்பிடிச் சின்னப் பிள்ளையளின்ர சடலங்கள் அங்க தோண்டி எடுக்கப்பட்டிருக்காம். ஆனால் 'பொடி' முழுக்க காணாமல்போகேல. தலை, வேற சில எலும்புகள் மட்டும் இல்லாமல் மிச்சசடலம் சுடலைக்குள்ளையே இருக்கிறதாம். நாய் மாதிரி ஏதும் மிருகங்கள் இப்பிடியான வேலையைச் செய்திருக்க முடியாது. ஏனெண்டால் அவ்வளவு பெரிய கிடங்கைத் தோண்டி, சவப்பெட்டியை உடைச்சு 'பொடியை' எடுக்க நாயால முடியாது. அதோட சொல்லிவைச்ச மாதிரி ஒரே உறுப்புகள் மட்டும் தான் காணாமல் போயிருக்கு. அந்தச் சுடலைக்கு கிட்ட செய்வினை, சூனியம் செய்யிற ஆக்கள் இருக்கினமாம். அவங்கள் தான் இப்பிடி தங்கட வேலைக்காக குழந்தையளின்ர 'பொடியை' தோண்டி எடுக்கிறாங்கள் எண்டு சனம் நம்புது. அப்பிடித்தான் இந்தப் பிள்ளையின்ர 'பொடியையும்' அந்த நாசமறுப்பார் கொண்டு போயிருப்பாங்களோ எண்டதுதான் சனத்தின்ர 'டவுட்'. குழந்தையளின்ர சடலத்தைக் கூட விட்டு வைக்காத அளவுக்கு கலி முத்திப்போட்டுது.**



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலமிக்க இங்கிலாந்தை பந்தாடியது இலங்கை!




**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில், பலம்மிக்க இங்கிலாந்து அணியை மிக இலகுவாகத் தோற்கடித்தது இலங்கை அணி.**

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர்களான பேர்ஸ்டவ் மற்றும் மலன் இருவரும் சொல்லிக்கொள்ளும்படியான இணைப்பாட்டத்தை வழங்கினார்கள். அணி 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மலன். அவரை வீழ்த்தினார் மத்தியூஸ். மூன்று ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் ரூட். 30 ஓட்டங்களுடன் பேர்ஸ்டவை வீழ்த்தினார் ராஜித. ஸ்ரோக்ஸ் ஒருமுனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் பட்லர் 8 ஓட்டங்களுடனும், லிவிங்ஸ்டன் ஓர் ஓட்டத்துடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 122 ஓட்டங்களில் 6 விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது இங்கிலாந்து. 43 ஓட்டங்களுடன் குமாரவால் ஸ்ரோக்ஸ் வீழ்த்தப்பட்டார். பின்வரிசை வீரர்கள் எவரும் பிரகாசிக்கவில்லை. 156 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது இங்கிலாந்து அணி.

பந்துவீச்சில் லகிரு குமார 3 இலக்குகளையும், மத்தியூஸ் மற்றும் ராஜித இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கும் ஆரம்பம் தடுமாற்றம் கண்டது. 4 ஓட்டங்களுடன் குசல் பெரேராவும், குசல் மெண்டிஸ் 11 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 23 ஓட்டங்களில் 2 இலக்குகளைப் பறிகொடுத்தது இலங்கை அணி. இலங்கை அணி சரியப்போகின்றதா என்ற பதற்றம் ரசிகர்களை ஆட்கொண்டது. இந்தத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டுவரும் பதும் நிஷங்க மற்றும் சமர விக்கிரம இருவரும் நிதானமாக ஆடினர். மற்றொரு விக்கெட்டை இழக்காமல் இலக்கை அடைந்து வெற்றிபெற்றது இலங்கை. பதும் நிஷங்க 77 ஓட்டங்களுடனும், சமர விக்கிரம 65 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)

## உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு 23**

பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இன்றைய (27.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..............................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
தே.அ.இல : ..............................................
தொ.இலக்கம் : ..............................................

**மெகா பரிசு**

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..............................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..............................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
தே.அ.இல : ..............................................
தொ.இலக்கம் : ..............................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

**பாகிஸ்தான்** – **தென்னாபிரிக்கா**

PCB

இடம் : சென்னை
நேரம்: பி.ப. 2.00

SA CRICKET

# தலைமைப் பதவியிலிருந்து பாபர் அசாமை நீக்குங்கள்!

### பாக். முன்னாள் வீரர்கள் வலியுறுத்து




பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாமை, தலைமைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர்கள் பலரும் வலியுறுத்தியுள்ளனர். உலகக்கிண்ணத் தொடரில் ஏற்பட்டுள்ள தொடர் தோல்விகளை அடுத்தே இந்த வலியுறுத்தல் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் வீரர் வசிம் அக்ரம் தெரிவித்ததாவது:-

இந்த உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் விளையாட்டு மிகவும் மோசமாக உள்ளது. குறிப்பாக களத்தடுப்பும் பந்துவீச்சும் படுமோசமாக உள்ளது. இவ்வாறான களத்தடுப்பையும் பந்துவீச்சையும் வைத்துக்கொண்டு உலகக்கிண்ணத் தொடரில் விளையாட முடியாது. எனவே பாகிஸ்தான் அணி தன்னை உடனடியாக மேம்படுத்தவேண்டும். வீரர்கள் உடற்தகுதியில்லாமல் உள்ளனர். தினமும் 8 கிலோ ஆட்டிறைச்சி உண்பதுபோல் அவர்களின் உடற்தகுதி உள்ளது - என்றார். (ம)

## தினம் ஒரு பரிசு நாள் 21 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| சி.கௌரிசங்கர் | - திருநெல்வேலி | ந.அஹசியா | - அரியாலை மேற்கு |
| சென.பகவதி | - சுழிபுரம் | எல்.நிருசிகா | - கோப்பாய் |
| செ.செந்தில்குமரன் | - கந்தர்மடம் | ஜி.தருண்யா | - நெளுக்குளம் |
| ந.அபிப்பிரியன் | - யாழ்ப்பாணம் | கே.கேதாஜினி | - பண்டாரிக்குளம் |
| தே.யசோதரன் | - உடையார்கட்டு | க.கம்சவண்ணன் | - ஈச்சமோட்டை |
| ச.வசந்தகுமார் | - நெடுங்கேணி | ஆர்.ரூபவர்ணா | - இளவாலை |
| [illegible] | - மருதனார்மடம் | ச.சந்தோஷ் | - பம்பைமடு |
| [illegible] | - [illegible] | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஜனாதிபதித் தேர்தலும் தமிழர்தரப்பு வியூகமும்

அடுத்த ஆண்டு அரசமைப்புக்கு அமைவாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கின்றார். ஆனால் இப்போதுள்ள நிலையில், ரணில் சொன்னதை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்பதை உறுதிபடவும் கூறமுடியாது. ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் தான் இன்னும் 5 ஆண்டுகள் ஆட்சியில் இருப்பதை உறுதி செய்யவே விரும்புகின்றார். ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்காமல் ஆட்சியில் தொடர்வதற்கு வசதியாக பொது வாக்கெடுப்பை நடத்தும் திட்டத்தையும் அவர் கைவசம் வைத்திருக்கின்றார். ரணில் கூறியதைப்போன்று ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு நடக்குமா என்பது தேர்தல் நடக்கும் வரையில் கேள்விக்குறிதான். ஏனெனில் அரசமைப்பின் பிரகாரம் நடத்தி முடிக்கப்பட்டிருக்கவேண்டிய உள்ளூராட்சித் தேர்தலையே நடத்தாமல் என்னென்னவோ தகிடுதத்தங்கள் செய்தவர்தான் ரணில். நீதிமன்றம் உத்தரவிட்டும், நிதியை விடுவிக்காமல் தேர்தலை முடக்கியவர் அவர். எனவே ஜனாதிபதித் தேர்தல் வேட்புமனு கோரப்பட்டு தேர்தல் நடந்தேறும் வரையில் அந்தத் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் நாட்டு மக்களிடம் இருக்கத்தான் செய்யும்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புத் தொடர்பில் தமிழர் தரப்பில் இப்போதே ஒருவித சலசலப்பு ஏற்பட்டிருக்கின்றது. கடந்தகாலங்களைப் போன்று தேர்தல் அறிவிக்கப்பட்டு இறுதி நேரத்திலேயே தேர்தல் தொடர்பில் என்ன செய்வது என்பதைப்பற்றி முடிவெடுக்கும் நிலைமையைத் தவிர்ப்பதற்காக முற்கூட்டியே தமிழர் தரப்புகள் ஆராய்கின்றன. குறிப்பாக ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி இது தொடர்பில் ஆராய்ந்திருக்கின்றது. எந்தவொரு சிங்கள வேட்பாளர்களும் நம்பிக்கைக்குரியவர்கள் அல்லர் என்பதையும் அவர்கள் கடந்த காலங்களில் வாக்குறுதிகளை வழங்கி நிறைவேற்றாமல் விட்டவர்கள் என்பதையும் கருத்திலெடுத்து, பொதுவேட்பாளராக தமிழர் ஒருவரைக் களமிறக்குவது தொடர்பில் முடிவெடுத்திருக்கின்றார்கள். தமது இந்த முயற்சிக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவைக் கோருவதற்கும் அவர்கள் தீர்மானித்திருக்கின்றார்கள். தென்னிலங்கையின் தேர்தல் களத்தில் சஜித், ரணில், அநுர ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பது உறுதியாகியிருக்கின்றது. ராஜபக்ச குடும்பத்திலிருந்து இப்போதைக்கு யாரும் களமிறங்குவதற்கான வாய்ப்பு இல்லை. தென்னிலங்கையின் வாக்குகள் பிரிவடையும் என்பதால் யாரும் 50 சதவீதத்தைத் தாண்டி முதல் சுற்றில் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற ஊகம் இருக்கின்றது. எனவே தமிழ்ப் பொது வேட்பாளரை களமிறக்குவதன் ஊடாக ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேரம் பேசலுக்கான வலுவை அதிகரித்துக் கொள்ளலாம் என்பது ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணியின் திட்டம். அது சிலவேளைகளில் சரியாகவும் இருக்கலாம், பிழைக்கவும் செய்யலாம். ஆனால் இங்கே முக்கியமாக கவனிக்க வேண்டிய சில விடயங்கள் இருக்கின்றன.


எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளர் தமிழர் தரப்பின் ஆதரவைப் பெறுகின்றாரோ அவர் தோற்கடிக்கப்படுவார். இதில் விதிவிலக்கு 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமே. அதுவும் நாட்டில் ஓர் மாற்றம் வேண்டும் என்ற அலையோட்டத்தாலேயே சாத்தியமானது.

தமிழர் தரப்பு இணைந்து ஒரு பொதுவேட்பாளரைக் களமிறக்கப் போகின்றது என்றாலே, கடும்போக்கு பௌத்த –சிங்கள பேரினவாதத் தரப்புகளின் இனவாதக் கூச்சல்கள் தென்னிலங்கையில் உச்சம் தொடும். இனவாதச் சகதிக்குள் தென்னிலங்கை முக்குளித்து எழும்பும். இப்படியானதொரு சூழல் ஏற்பட்டதும், இனவாதத்தை கெட்டியாகப்பிடிக்கும் ஜனாதிபதி வேட்பாளர் இலகுவாக வெற்றியைப் பெற்றுக்கொள்வார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பதும் தமிழ் மக்களுக்கு ஒரு வகையில் மரணப்பொறிதான். சும்மா இருந்த சிங்களவர்களை உசுப்பேத்தி அவர்களை இனவாத ரீதியில் ஒரு திரட்சியாக மாற்றும் முயற்சியாகவும் இது அமையலாம். எனவே எடுத்த எடுப்பில் பொது வேட்பாளர் என்ற முடிவிலிருந்து அணுகுவதிலும் பார்க்க, வேறுவகையான தெரிவுகளையும் ஆலோசிப்பதுதான் மிகச் சிறந்த நகர்வாக இருக்கமுடியும்.

நாளொரு நல்வார்த்தை

"ஏமாற்றுவதைக் காட்டிலும்
தோற்றுப்போவது
மரியாதைக்குரியது."
-ஆப்ரஹாம் லிங்கன்-




# ஜனாதிபதித் தேர்தலுக்கு ரூ.10 பில்லியன் ஒதுக்குக

**கொழும்பு, ஒக். 27**

**ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதை நடத்துவதற்கு 10 பில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு தேசிய தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.**

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதில் ஜனாதிபதி தேர்தலுக்காக மேற்படி தொகை ஒதுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பான செலவு மதீப்பீட்டு அறிக்கை திறைசேரிக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இந்தத் தகவலை தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.

'வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்படுவதற்கு முன்னர் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் மதிப்பீட்டு அறிக்கைகளை திறைசேரி கோரும். அந்தவகையில் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல், மாகாணசபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிசபைத் தேர்தல்களுக்கான செலவு மதிப்பீட்டு அறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளோம்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி தேர்தல்களை நடத்த தலா 10 பில்லியன் ரூபாபடி 40 பில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-44)

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது

கொழும்பு, ஒக். 27

ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன எனத் தகவல்கள் வெளியாகும் நிலையில், இவ்விரு தேர்தல்களையும் ஒத்திவைக்க முடியாது என்று இலங்கை கம்யூனிஸ் கட்சித் தலைவரான டியூ குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொதுத்தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு அரசமைப்பில் இடமுள்ளது. ஆனால் அதனை ஒத்திவைப்பதற்கு இடமில்லை. அதேபோல ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கும் அரசமைப்பில் இடம் இல்லை. ஆளுந்தரப்பு உயர்நீதிமன்றத்தை நாடினால் கூட அதற்கான வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்றே நம்புகின்றேன்.

உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் அரசமைப்புக்கு அப்பால்சென்று, சிற்சில சட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தி ஒத்திவைக்கப் பட்டன.

இதற்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. ஆனால் பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட நிறைவேற்று அதிகாரத்துக்கு அதிகாரம் இல்லை - என்றார். (ஒ-44)

நாளை 28.10.2023
சனிக்கிழமை
ஐப்பசி 11

சுபநேரம் : 03.03 - 04.33
ராகுகாலம் : 09.03 - 10.23

பூரணை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துனுக்காய் பிரதேச சபை
## 2024 ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்.

துனுக்காய் பிரதேசசபையின் 2024 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள். சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குனர்கள். உற்பத்தியாளர்கள். ஒப்பந்தகாரர்கள். அங்கீகரிக்கப்பட்ட சாங்கங்கள். வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 27.10.2023 தொடக்கம் விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விண்ணப்பப் படிவக்கட்டணம் ரூபா 50.00ம். விண்ணப்பப் பதிவுக்கட்டணமாக ரூபா 1500.00ம் (VAT, NBT நீங்கலாக) செலுத்துதல் வேண்டும்.. அத்தோடு கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழேயுள்ள கட்டண விபரங்களுக்கு ஏற்றவாறு கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 17.11.2023 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள் :**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் வேலைகள்
தொகுதி "C" - வாகன திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும்
தொகுதி "D" - குடிசார் வேலைகள்

| தொ. இல | பொருட்கள் வழங்கல் (பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு) |
| A - 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய டோனர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குழியலறை பொருத்திகள், மாபிள்கல் வகைகள், நீர்வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட இரும்பு பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் காட்வெயார் பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்ப்புக்கள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், காபிக், மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், டயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A - 11 | தோல் உற்பத்திப் பொருட்கள், கம் சப்பாத்துக்கள் |
| A - 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A - 14 | இரும்புப் பொருட்கள் |
| A - 15 | கற்கள், மண்வகைகள் |
| A - 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A - 17 | பனைமரங்கள், சலாகைகள் |
| A - 18 | அலங்காரப் பொருட்கள் |
| A - 19 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A - 20 | தார் |
| தொ. இல | சேவைகள்/வேலைகள் விபரம் |
| B - 01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழினுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B - 02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் (காற்று குளிராக்கி, தொலைநகல் நிழற்பட பிரதி இயந்திரம், கணினி, விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரம்) |
| B - 04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள், ஜெனரேட்டர் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| B - 05 | பதிப்பக வேலை – சகலவித படிவங்கள், ஏனையவை |
| B - 06 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரிப்பும் |
| B - 07 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம் |
| B - 08 | கோலவுடை தைத்தல் |
| B - 09 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B - 10 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B - 11 | அச்சிடுதல் |
| B - 12 | வளிச்சீராக்கி திருத்தம் சேவிஸ் செய்தல் |
| தொ. இல | வாகன திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும் |
| C - 01 | சகல விதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம் சீற் என்பவற்றிற்கான குசன் வேலை |
| C - 02 | சுகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| C - 03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல் உலோக வேலைகள் |

**குடிசார் வேலைகள்** (Civil works) - ICTAD / CIDA **பதிவுஉள்ளவர்கள் மட்டும்**

* கட்டட நிர்மானமும் திருத்தமும்
* வீதி நிர்மானமும் திருத்தமும்
* கிணறு. குழாய் கிணறு அமைத்தல்

| தொ. இல | ஒப்பந்தத்தொகை | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| D - 01 | ரூபா 2,000,000ற்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத்தொகை | ரூபா 2,000 (VAT, NBT நீங்கலாக) |
| D - 02 | ரூபா 2,000,000ற்கு அதிகமானதும் ரூபா 5,000,000 ற்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத்தொகை | ரூபா 3,000 (VAT, NBT நீங்கலாக) |

**நியந்தனைகள்**

1. வழங்கல்கள். சேவைகள். குடிசார் வேலைகள் 2024ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. பதிவிற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு / செயலாளருக்கு உண்டு.
3. ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளிற்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான படிவங்களில் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கவேண்டும்.
4. பதிவுசெய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமை பிரதேசசபைக்குண்டு.
5. வியாபார பதிவுசான்றிதழில் குறிப்பிட்ட பொருட்கள் சேவைகளுக்கே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவர்.
6. விலைமனுகோரும்போது முன்வராத. கட்டளைகளுக்காக குறித்த நேரத்திற்கு பண்டங்கள் & சேவைகளை வழங்காத. சமர்பிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் பண்டங்களை வழங்காத வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பெயர்பட்டியலிலிருந்து நீக்கும் உரிமை பிரதேசசபைக்குண்டு.
7. விண்ணப்ப படிவங்களை நேரில் சமர்பிக்கலாம் அல்லது "வழங்குநராக பதிவு செய்வதற்கான விண்ணப்பம்-2024" என கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு "செயலாளர், பிரதேசசபை, துனுக்காய்" எனும் முகவரிக்கு தபால்மூலம் அனுப்பி வைக்க முடியும்.
8. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அ.பாலகிருபன்
செயலாளர்,
பிரதேசசபை, துனுக்காய்.

# சிறுவர் முதியோர்தின நிகழ்வுகள்

*யாழ்ப்பாணம், ஒக். 27*

கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் முதியோர் சங்கம் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. (ச-ரி)

## வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
### தீபாவளி தினம் வரை

## இந்தியன் செலக்ஷன்

## தீபாவளி ஜவுளிக் கொண்டாட்டம்



பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் டொப், பாட்டி புரொக், சேட், ரீ சேட், டெனிம் ஜீன்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகளையும் இன்னும் மங்கையர் மனங்கவரும் ஆடைத் தெரிவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

## விஷேட விலைக்கழிவு

டொப் 500/=

ரெடிமேட் சல்வார் 750 /=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

தீபாவளி தினம் வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 • 07 • 1976



மறைவு 25 • 10 • 2023

## சத்தியசீலன் சிவநந்தினி

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கச்சேரி நல்லூர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியசீலன் சிவநந்தினி அவர்கள் நேற்றுமுன்தினம் (25.10.2023) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் செல்வராசா மற்றும் காலஞ்சென்ற லோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், சத்தியசீலனின் பாசமிகு மனைவியும். நேருகா. கனுஜா. சீறீசனுஸ். கஜந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், கோகுலறூபன். றோய். கலையரசி ஆகியோரின் மாமியாரும். பிறெசிகாவின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2023) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மணியந்தோட்டம் வசந்தபுர கிறிஸ்தவ சேமக்காலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

627 கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

077 623 9396

(CS 52627) (Ak.1)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரக் கண்காட்சி கோண்டாவிலில் இன்று

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலைய ஆதரவில் இயங்கும் குட்டிச் சுட்டி முன்பள்ளி மற்றும் 'அகம்' குழந்தைகள் பகல் நேர காப்பக மாணவர்களின் வருடாந்த சித்திர ஆக்கக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை முன்பள்ளியின் பிரதான மண்டபத்தில் சனசமூக நிலையத் தலைவர் து.சுதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் கணபதிப்பிள்ளை நித்தியானந்தன். சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் கணிதச்சுடர் சண் வாமதேவன், ஊடகவியலாளர் செல்வநாயகம் ரவிசாந் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)



## பனம் விதை நடுகை

ஜே/129 கிராமஅலுவலர் பிரிவினால் சுதுமலை அம்மன் கோயில் குளக்கரையை அண்மித்த பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. (ச-66)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

இறைச்சிக் கடைகள். கருவாட்டுக்கடைகள். பல்பொருள் வாணிபக்கடைகள் (நாவாந்துறை). சந்தைகள். சிற்றுண்டிச்சாலைகள். வாகனப்பாதுகாப்பு நிலையங்கள். ஒலிபரப்புச் சேவை. ஆரிய குளம் படகோட்டல் மற்றும் நீர்விளையாட்டுகள். வாகன வரி அறவீடு என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2024 (01.01.2024 - 31.12.2024)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் 01.01.2024 ம் திகதி முதல் 31.12.2024 ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,150.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 27.10.2023 - 13.11.2023 மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை) .
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 14.11.2023 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 14.11.2023 மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர். மாநகர சபை. யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 14.11.2023 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

| இல | விபரம் | கடை இல | பிணைப்பணம் | 2024 ம் ஆண்டுக்கான ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 315,000.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 56,100.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 195,500.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 289,500.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 195,000.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 200,000.00 |
| 7 | பண்ணை கோழியிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 666,825.23 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 113,000.00 |
| 9 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,686,000.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 1,055,000.00 |
| 11 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 124,736.84 |
| 12 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 345,100.00 |
| 13 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 336,913.04 |
| 14 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 331,000.00 |
| 15 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 399,495.00 |
| 16 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 489,735.98 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 549,192.02 |
| 18 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 657,089.45 |
| 19 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 129,017.79 |
| 20 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 955,200.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,875,000.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 650,000.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 595,000.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 275,100.00 |
| 25 | நாவாந்துறை கோழியிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 353,226.52 |
| 26 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 50,967.41 |
| 27 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 510,386.31 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,400.00 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 495,200.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 427,123.07 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,000.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,000.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 511,000.00 |
| 34 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | | 5,000.00 | 282,813.44 |
| 35 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 218,910.61 |
| 36 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 153,921.53 |
| 37 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 136,921.75 |
| 38 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 152,074.47 |
| 39 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | | 10,000.00 | 2,250,000.00 |
| 40 | பண்ணை மீன் சந்தை | | 10,000.00 | 7,423,100.00 |
| 41 | குருநகர் மீன் சந்தை | | 10,000.00 | 8,065,550.00 |
| 42 | செங்குந்தா சந்தை | | 10,000.00 | 5,059,534.82 |
| 43 | நாவாந்துறை மீன்சந்தை | | 10,000.00 | 667,000.00 |
| 44 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 84,260.00 |
| 45 | பாசையூர் மீன்சந்தை | | 2,000.00 | 379,000.00 |
| 46 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர்களது அறிமுகச்சந்தை | | 2,000.00 | 6,910.06 |
| 47 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 260,352.00 |
| 48 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | | 5,000.00 | 317,000.00 |
| 49 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | | 1,000.00 | 11,000.00 |
| 50 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள வாகன பாதுகாப்பு நிலையம் | | 1,000.00 | 339,999.00 |
| 51 | நீதிமன்ற துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | | 2,000.00 | 411,000.00 |
| 52 | வாகனத்தரிப்பிடக் குத்தகை | | 40,000.00 | 3,608,571.43 |
| 53 | பெரிய கடை மரக்கறிச்சந்தை வாழைப்பழக்கடை வடகிழக்கு மூலையாகவும்,சந்தையின் வைரவர் கோவிவில் வடமேற்கு மூலையாகவும் உள்ள துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | | 5,000.00 | 250,000.00 |
| 54 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல்விளம்பர ஒலிபரப்பு சேவை | | 10,000.00 | 500,000.00 |
| 55 | ஆரிய குளம் படகோட்டல் சேவை | | 10,000.00 | 165,000.00 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையாளர்,
யாழ். மாநகர சபை.

# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
# 2024 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடை மற்றும் தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் என்பவற்றினை 2024 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 27.10.2023 தொடக்கம் 13.11.2023 , 2.30 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 14.11.2023 முற்பகல் 10 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 14.11.2023 முற்பகல் 10.30

1. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.** என்னும் முகவரிக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 14.11.2023 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய **உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்ற முகவரிக்கு 14.11.2023 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட பிரதேச செயலாளரால் மேலொப்பமிட்ட வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக சம்பந்தப்பட்டவர் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும். கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
4. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
5. எம்மால் நிர்ணயிக்கப்படும் இடத்தில் மாடுகள், ஆடுகள் கட்டப்பட்டு அனுமதிக்கப்பட்ட கொல் களத்திலேயே இறைச்சிக்குரிய மாடுகள், ஆடுகள் அறுக்கப்பட வேண்டும்.
6. எமது சபையின் சந்தைகள், இறைச்சிக்கடைகளிலிருந்து 1.5KM தூரத்திற்குட்பட்ட கடைகளில் அல்லது வேறு எவ்விடத்திலும் மரக்கறிகள், இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
7. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட கேள்வித் தொகையின் 1/3 பகுதியை (உரிய வரிகளுடன்) பாதுகாப்பு வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
8. சந்தைகள், இறைச்சிக் கடைகள், சிறுவர் பூங்கா,கருவாட்டுக்கடை மற்றும் தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் என்பவற்றிற்கு விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு சபையின் கடை நடாத்தியவராயின் எதுவித நிலுவையும் இல்லை என்பதனை உப அலுவலக பொறுப்பதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தும்.
10. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பெயர் | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NB) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| | **முள்ளியவளை உப அலுவலகம்** | | | | |
| 1 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | - | **51,500.00** |
| 2 | சிலாவத்தை பொதுச்சந்தை | 2,000.00 | 2,000.00 | - | **50,000.00** |
| 3 | கேப்பாப்பிலவு பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | - | 4,950.00 |
| 4 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 35,000.00 | 2,000.00 | 1,200,000.00 |
| 5 | முள்ளியவளை கோழிஇறைச்சிக்கடை | 2,000.00 | 15,000.00 | 2,000.00 | 436,100.00 |
| 6 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 80,000.00 | 1,800.00 | 2,711,100.00 |
| 7 | தண்ணீரூற்று கோழிஇறைச்சிக்கடை | 2,000.00 | 70,000.00 | 1,800.00 | 2,361,100.00 |
| 8 | சிலாவத்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 10,000.00 | - | 313,000.00 |
| 9 | கேப்பாபிலவு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 1,000.00 | 4,230.00 |
| 10 | கேப்பாபிலவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 4,000.00 | 1,000.00 | 120,000.00 |
| 11 | தண்ணீரூற்று சந்தை வாகனத்தரிப்பிடம் | 2,000.00 | 1,000.00 | - | 24,100.00 |
| | **முல்லைத்தீவு உபஅலுவலகம்** | | | | |
| 1 | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 2,000.00 | 35,000.00 | - | **1,213,000.00** |
| 2 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 65,000.00 | 2,000.00 | 2,100,000.00 |
| 3 | முல்லைத்தீவு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 45,000.00 | 2,000.00 | 1,451,005.00 |
| 4 | முல்லைத்தீவு கருவாட்டுக்கடை | 2,000.00 | 3,000.00 | 2,000.00 | 900,000.00 |
| | **கொக்கிளாய் உப அலுவலகம்** | | | | |
| 1 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 20,000.00 | 1,000.00 | 700,000.00 |
| 2 | கொக்கிளாய் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 15,000.00 | 1,000.00 | 525,900.00 |
| 3 | கொக்குத்தொடுவாய் பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | - | **3,000.00** |
| | **முள்ளிவாய்க்கால் உப அலுவலகம்** | | | | |
| 1 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 4,000.00 | 1,000.00 | 115,000.00 |
| 2 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 1,000.00 | 4,000.00 |
| 3 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | - | 3,150.00 |
| 4 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 2,000.00 | - | 45,510.00 |
| | **செம்மலை உப அலுவலகம்** | | | | |
| 1 | அளம்பில் பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | - | **12,000.00** |
| 2 | குமுழமுனை பொதுச்சந்தை | 2,000.00 | 5,000.00 | - | **171,200.00** |
| 3 | செம்மலை பொதுச்சந்தை | 2,000.00 | 1,000.00 | - | **22,600.00** |
| 4 | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 15,000.00 | 2,000.00 | 392,897.00 |
| 5 | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 12,000.00 | 2,000.00 | 120,000.00 |
| 6 | செம்மலை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 1,000.00 | 7,000.00 |
| 7 | அளம்பில் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 2,000.00 | 2,000.00 | 50,000.00 |

**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.**
**26.10.2023**

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்துபோகும். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**இடபம்:** குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்து போகும். உடல்நலத்தில் கவனம் தேவை. பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனதைவாட்டும்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**கடகம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி:** சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள்.

**துலாம்:** எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் அமைவார்கள். நன்மை கிட்டும் நாள்.

**விருச்சிகம் :** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும்.

**தனுசு:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கும்பம்:** சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்:** கணவன்–மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும்.

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14.11.1924



மறைவு
25.10.2007

**அமரர் வல்லிபுரம் மகேந்திரராஜா**
**(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்)**
*திதி : 27.10.2023 சதுர்த்தசி*

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறக்க முடியாத நினைவும் எம் அப்பாவின் அன்பும்.

மேதேஸ் லேன், மானிப்பாய்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினமும்...

என்று யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விதிகளுக்கு முரணான போக்குவரத்து அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. பொலிஸார் இத்தகையவர்களை இறுக்கமாகக் கண்காணிக்கின்றனர். தினமும் சுமார் 200 பேர் விதிகளுக்கு முரணான சாரத்தியத்துக்காகப் பொலிஸாரால் பிடிக்கப்படுகின்றனர். தலைக்கவசம் அணியாது வாகனம் செலுத்தல், மதுபோதையில் வாகனம் செலுத்துதல், சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் இதர பத்திரங்கள் இல்லாது வாகனம் செலுத்தல் உள்ளிட்ட குற்றங்களுக்காகவே அவர்கள் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்படுகின்றது. தண்டப் பணத்துக்கான பற்றுச்சீட்டு வழங்கப்படுபவர்களில் 10 வீதமானவர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் - என்றார். (அ-ம-26)

## சங்கிலி அறுத்த...

யாழ்ப்பாணம், கொடிகாமம், மட்டுவில், சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் மர்மக் குழுவொன்றால் அண்மைக்காலமாக சங்கிலி, தாலிக்கொடி உள்ளிட்டவை அபகரிக்கப்பட்டு வந்தன. இது தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின்போதே பிரதான சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அவர்கள் மோட்டார் சைக்கிள்களைத் திருடிச் சென்று அவற்றைப் பயன்படுத்தி இந்தக் கொள்ளையில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## ஒலுமடு பொதுநூலகத்தில் தேசிய வாசிப்பு மாதப் போட்டிகள்

புதுக்குடியிருப்புப் பிரதேசசபையின் ஒலுமடு பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் மாணவர்களுக்கிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்குடன் இன்று வெள்ளிக்கிழமை போட்டிகள் நடைபெறவுள்ளன.

முன்பள்ளிச் சிறார்களுக்கான கதைகூறும் நிகழ்வு பாடசாலை மாணவர்களுக்கான சித்திரம், ஒட்டுச் சித்திரம், கட்டுரை ஆக்கம், கவிதை ஆக்கம், நுண்ணறிவு, பேச்சுப் போட்டிகள் உள்ளிட்ட போட்டிகளே நடைபெறவுள்ளன. (ம)

## ஆலயப் பொதுக்கூட்டம்

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய பரிபாலனசபையின் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத்தெரிவும் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் செ.நவரத்தின ராசா தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் உபயகாரர்கள், அடியவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் தவறாது கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலனசபையினர் கேட்டுள்ளனர். (ச-66)


## முதலாம் ஆண்டு சிரார்த்ததின அழைப்பு



கடந்த 07.11.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் இராசரத்தினம் வள்ளியம்மா**

தோற்றம் 06.03.1948

மறைவு 07.11.2022

அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்ததின நிகழ்வு இன்று (27.10.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தின் உறுப்பினர்
**Dr. கஜனி**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சங்கரநாதன் விஜயலட்சுமி**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS26730 M.1)

மலர்வு 09.05.1959 உதிர்வு 25.10.2023

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 03 - 1937



மறைவு 24 - 10 - 2023

**திருமதி கமலாதேவி லோகசுந்தரம்**
( ஓய்வு பெற்ற ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி )

யாழ். சாவகச்சேரி பெரிய அரசடி ஆசிரியர் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி லோகசுந்தரம் அவர்கள் 24-10-2023 அன்று காலமானார்.அன்னார், காலஞ்சென்ற சிவசம்பு, உமையம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற லோகசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும்,அன்பழகன், அருளொளி அவர்களின் பாசமிகு தாயாரும், கமலாகரன் அவர்களின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற கமலநாதன் (முன்னாள் கல்விப் பணிப்பாளர் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை அமைச்சு, திருகோணமலை), விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பீரிஸ் மலர்சாலை, கலுபோவில வில் 28-10-2023 சனிக்கிழமை காலை 8.00 -9.45 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல் : மருமகன்.

cs 26727 M-1

தொடர்பு : 077 7676593 (அன்பழகன்)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 30 . 01 . 1971



மறைவு 27 . 09 . 2023

கடந்த 27.09.2023 புதன்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் கனகரத்தினம் சுபாஸ்கரன்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (27.10.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும் ஆறுதல் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உற்றார் உறவினர் நண்பர்களுக்கு எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

இல.54, கன்னாபுரம்,
[illegible]துறை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
076 0363908


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலையாளபுரம் பாடசாலையின் குடிதண்ணீர்ச் சிக்கல் நிவர்த்தி

கிளிநொச்சி, ஒக். 27

கிளிநொச்சி - மலையாளபுரம் திருவள்ளுவர் ஆரம்பப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட குடிதண்ணீர்க் கிணறும் அதனுடன் இணைந்த குடிதண்ணீர் வழங்கல் கட்டமைப்பும் நேற்றுமுன்தினம் பயன்பாட்டுக்குக் கையளிக்கப்பட்டது.

குறித்த பாடசாலையில் நீண்டகாலமாக குடிதண்ணீர்ப் பிரச்சினை நிலவிவந்தது.

இதனை நிவர்த்திசெய்யுமாறு பாடசாலை அதிபர் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனுக்கு விடுத்த கோரிக்கைக்கமைய, நியூஸிலாந்தில் வசிக்கும் அரியதாஸ் செல்வதாஸ் என்பவரின் நிதிப்பங்களிப்பில் இந்தக் குடிதண்ணீர்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது. (ச-100)

# மத ஒற்றுமையை வளர்க்கும் பாடசாலைச் சமயவிழாக்கள்

### மன்.சென்.மேரிஸ் அதிபர் தெரிவிப்பு



மன்னார், ஒக். 27

**பாடசாலைகளில் சமய விழாக்களை நடத்துவதன் மூலம் கலாசார விழுமியங்களை மாணவர்களிடையே கட்டியெழுப்புவதுடன் இனஒற்றுமை, ஐக்கியம், சமூக ஒற்றுமை ஆகியவற்றை வளர்த்து சமூக கட்டமைப்பை பலப்படுத்த முடியும்.**

- இவ்வாறு மன்னார் சென்.மேரிஸ் வித்தியாலயத்தில் நடைபெற்ற வாணிவிழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய வித்தியாலய அதிபர் எஸ்.ஆர்.பச்சேக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாழ்க்கைக்குரிய பண்புகளையும் எதிர்காலத்துக்கான கல்வியையும் முறையாகக் கற்றுக்கொள்கின்ற தளமாக விளங்கும் பாடசாலையில் நடத்தப்படுகின்ற சமயவிழாக்கள், மாணவர்கள் மத்தியில் மதஒற்றுமையை வளர்க்கக் கூடியவை.

வாணி விழா சமய நிகழ்வானது எமது பாடசாலையில் வருடந்தோறும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நாம் எல்லாச் சமயங்களுக்கும் ஒரு மதிப்பளிக்கவேண்டும் என்ற சிந்தனையில் இந்த விழாவைக் கொண்டாடுகின்றோம். ஒவ்வொரு மாணவனும் சகல மதங்களுக்கும் மதிப்பளிக்க பாடசாலைகளில் கொண்டாடப்படும் இந்த சமய விழாக்கள் பெரிதும் பங்காற்றுகின்றன - என்றார். (ச-60)

### மாடு திருடுவோருக்கு

## இனி அபராதம் ரூ. 1 மில்லியன்

கொழும்பு, ஒக். 27

மாடுகளைத் திருடுபவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை ஒரு மில்லியன் ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றத்துக்கு முன்பதாக மிருகவதைச் சட்டத்தின்கீழ் 50 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது. எனினும், குறித்த அபராதத் தொகை போதுமானதல்ல என முன்வைக்கப்படும் கருத்துகள் வலுப்பெற்றுள்ளன.

அதற்கமைய மாடுகளைத் திருடும் நபர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக் குற்றத்துக்கான ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிப்பது தொடர்பிலும் மிருகவதைச் சட்டத்தினுள் உள்ளடக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்தார். (ச-இ)

## பீடி இறக்குமதி வரி குறைப்பு!

கொழும்பு, ஒக். 27

பீடி இலைகளின் இறக்குமதி வரி கிலோ ஒன்றுக்கு 250 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதனால் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட பீடி ஒன்றுக்கு அறவிடப்படும் 2 ரூபா வரி 3.50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பீடி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

ஒரு கிலோ பீடி இலைக்கு தற்போது 5 ஆயிரம் ரூபா அதிக வரி விதிக்கப்படுவதனால் 75 வீத பீடி இலை இறக்குமதி முறைசாரா முறைகளிலேயே நடைபெறுகிறது.

இந்த மோசடிகளால் இழந்த வரியை மீளப்பெறுவதற்கே இந்த வரித்திருத்தத்தை அரசு மேற்கொள்கிறது - என்றார். (ச-இ)



## தெல். துர்க்காதேவியை தரிசித்த மாவைக்கந்தன்

யாழ்ப்பாணம், ஒக். 27

மாவட்டபுரக் கந்தப்பெருமான் விஜயதசமி நன்நாளான கடந்த செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்துக்குப் பக்தர்கள் புடைசூழ சென்று அருட்காட்சியளித்தார்.

விஜயதசமி நாளில் மாவிட்டபுரம் கந்தப்பெருமான் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் எழுந்தருளுவது நீண்டகாலமாகப் பின்பற்றப்படும் பாரம்பரிய நிகழ்வாகும். (ச-66)

## மக்கள்சாரா தமிழ்க்கட்சிகளின் போராட்டங்கள் பயன்தராது!

### அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

வடக்கு - கிழக்கில் ஹர்த்தாலை அறிவித்த தமிழ்க்கட்சித் தலைவர்கள் 4 பேர் அன்றைய தினம் நாடாளுமன்றம் பிரவேசித்துள்ளனர். மக்களை வீதிகளில் இறக்கிவிட்டு சுகபோகங்களை அனுபவிப்போர் உண்மையான மக்கள் பிரதிநிதிகளல்லர். மக்கள் மயப்படாத போராட்டங்கள் பயன்தராது.

- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் போராட்டங்களை வரவேற்கப்படவேண்டியவை. ஆனால் போராட்டத்துக்கு அழைப்புவிடுத்த தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நாடாளுமன்றம் வந்ததை அவதானித்தேன். அவர்களின் பெயரை நான் கூறவிரும்பவில்லை. தகவலறியும் உரிமைச் சட்டத்தினூடாக அவர்களை நீங்கள் அறிந்துகொள்ளமுடியும்.

மக்களின் நாளாந்த வருமானத்தை இழக்க வைக்க கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துவிட்டு நாடாளுமன்ற சலுகைகளை அனுபவிப்போர் உண்மையான மக்கள் பிரதிநிதிகளாக இருக்கமுடியாது. ஜனநாயக நாடு ஒன்றில் மக்கள் மயப்படாத போராட்டங்கள் எவ்வித பயனையும் தராது - என்றார். (ச-27)



கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலய வருடாந்த நவராத்திரியின் மானம்பு உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை அடியவர்கள் சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தின்போது, நகர அபிவிருத்தி அதிகாரசபையால் காணிகள் அபகரிக்கப்படுகின்றன என்றும் அண்மையில்கூட கீரிமலை ஜனாதிபதி மாளிகை தனியார் பல்கலைக்கழகத்துக்குக் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் குற்றஞ்சாட்டினார். இதற்குப் பதில் தெரிவிக்கையிலேயே குறித்த ஆதனம் இன்னமும் குத்தகைக்கு வழங்கப்படாத விடயத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி மாளிகையை தனியார் பல்கலைக்கழகம் ஒன்றுக்கு வழங்கவிருப்பது திட்ட முன்மொழிவே அன்றி அது தான் இறுதி முடிவு என்பதல்ல. அத்துடன் அவ்வாறு ஜனாதிபதி மாளிகை குத்தகைக்குக் கொடுப்பதற்கு முன்னர் அது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தே இறுதி முடிவு எடுக்கப்படும் - என்றார்.

இதேவேளை- கீரிமலையில் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதி, நாட்டின் பாதுகாப்புத் தேவையின் பொருட்டே மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்டதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு பாதுகாப்பு சாராத வேறு விடயங்களுக்கு மக்களிடம் இருந்து பெற்ற காணியை, அரச காணியாகக் காட்டி வருமானமீட்ட முயல்வது சட்டத்துக்கு விரோதமானது என சுமந்திரன் எம்.பி. இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார். (அ-ம-26-125)

## அடித்துச்...

கொடூரமாகத் தாக்கப்பட்டு முகம் சிதைக்கப்பட்ட நிலையில், இளைஞர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நவரத்தினம் மதுசன் (வயது -23) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை இராமநாதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113-214)

## தென்கொரியப்...

229 தென்கொரியக் கடற்படைச் சிப்பாய்கள் உள்ளனர்.

இந்திய எதிர்ப்பையும் மீறி சீனக் கடற்படைக்கப்பல் 'ஷியான்- 6' கொழும்பு துறைமுகத்தில் ஏற்கனவே நங்கூரமிட்டுள்ளது. எல்லை நாடுகளான சீனாவும், தென்கொரியாவும் ஏற்கனவே தமக்குள் முறுகல் நிலையில் இருக்கையில் குறிப்பாக சீன விமானங்கள் கொரிய வான் பரப்பினுள் அத்துமீறி நுழைந்து வருவதாக தென்கொரியா குற்றம் சுமத்தி வரும் நிலையில், இரு நாட்டுக் கப்பல்களும் ஒரே நேரத்தில் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளமை உச்சப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-6)

## சங்கிலி...

பெற்றுள்ளது. சங்கிலியை அபகரித்த கொள்ளையர்கள் ஒரு கட்டத்தில் மோட்டார்சைக்கிளைக் கைவிட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

முன்பள்ளியில் இருந்து மகளை ஏற்றிக்கொண்டு கொயிலாமனை, அண்ணமார் கோவிலடியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளம் தாயை வழிமறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர், நபர் ஒருவரின் பெயரைச் சொல்லி வினாவியுள்ளனர். அவரை எனக்குத் தெரியாது என்று கூறிவிட்டு குறித்த இளம் தாய் பயணிக்க எத்தனித்தபோது மோட்டார்சைக்கிளுடன் தள்ளி கீழே வீழ்த்திவிட்டு அவரின் கழுத்தில் அணிந்திருந்த முக்கால் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

உடன் சுதாகரித்துக் கொண்ட அந்த இளம்தாய், உடனேயே எழுந்து, மோட்டார் சைக்கிளில் சத்தமிட்டவாறே துரத்திச் சென்றுள்ளார். இதையடுத்து வீதியால் பயணித்தவர்கள் திருடர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்டபோது, அவர்கள் மோட்டார்சைக்கிளைக் கைவிட்டுவிட்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்ட நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டார்சைக்கிளும் சுன்னாகம் பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் என விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரும் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ம-100)

## பிறர்...

கின்றன என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை 'தல்செவன'விடுதி அமைந்துள்ள பகுதி, பருத்தித்துறை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னாரில் 125 கட்டடத் தொகுதிகள் என சுங்கத் திணைக்களத்துக்குரிய பல ஆதனங்கள் வடக்கில் இடம்பெற்ற போரைத் தொடர்ந்து பிறரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. சுங்கத் திணைக்களத்தில் நான் பணியாற்றிய காலத்தில், 'தல்செவன' விடுதி அமைந்துள்ள பகுதிக்குச் சென்று இராணுவத் தரப்புடன் கலந்துரையாடி அந்தக் காணிகளை விடுவிக்க வலியுறுத்தியிருந்தேன் - என்றார். (அ-ம-125-26)

## இணையத்தில்...

யோகத்தர் ஒருவரும் அவருடைய கணவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பல்கலைக்கழகத்தில் தகவல் தொடர்பாடல் உத்தியோகத்தராகக் கடமையாற்றும் பெண் அலுவலர் கனடாவுக்கு அனுப்புவதாக இணையத்தில் ஆசைகாட்டி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் 21 இலட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தெற்கில் உள்ள பல்கலைக்கழகமொன்றில் தகவல் தொடர்பாடல் உத்தியோகத்தராகக் கடமையாற்றும் மேற்படி பெண் அலுவலரைக் கைதுசெய்தனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது, மோசடி செய்யப்பட்ட பணத்தை கைதானவரின் கணவனும் கையாடல் செய்தமை தெரியவந்ததையடுத்து அவரையும் பொலிஸார் கைது செய்தனர். சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-26)

## கூட்டமைப்பின்...

யாக தலையிடவேண்டும் சுமணரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்துள்ள நான்குபக்கக் கடிதத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எட்டப்பட்டுள்ள உடன்படிக்கை காரணமாக விக்கிரமசிங்க - ராஜபக்ச அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை திவுலுபொத்தானையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் உள்ள மக்களை அச்சுறுத்துவதற்கு அனுமதித்துள்ளது.

அரசியல் தலைமைத்துவத்தின் சார்பில் மகாவலி அதிகாரிகளும், பொலிஸாரும் கிழக்கு மாகாணத்திலிருந்து சிங்களவர்களை வெளியேற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஏனையவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் கிழக்கு மாகாண ஆளுநரும் முக்கியமானவர்கள். ஏனைய சமூகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை சிங்கள சமூகத்தினரிடமிருந்து பறிப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

திவுலுப்பொத்தானையில் சிங்களவர்கள் நீண்டகாலமாக வசிக்கின்றனர். அங்கு 80 தொல்பொருள் இடங்கள் காணப்படுகின்றன. சிங்களவர்களையும், முஸ்லிம்களை அங்கிருந்து விரட்டுவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் படுகொலைகளில் ஈடுபட்டார்கள். விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரை அரசாங்கம் 2009 இல் வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவரும் வரை அங்கிருந்து அகற்றப்பட்ட மக்களால் தங்கள் பகுதிகளுக்கு மீண்டும் திரும்பிவரமுடியவில்லை.

மைத்திரி - ரணில் அரசாங்கம் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற அரசியல்வாதிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து 2016ஆம் ஆண்டு அந்த மக்களை அங்கிருந்து வெளியேற்றி அந்தப் பகுதியை கால்நடை மேய்ச்சலுக்காக வழங்கியது. 2019ஆம் ஆண்டு நவம்பரில் ஆட்சி மாற்றம் இடம்பெற்ற பின்னரே திவுலுப்பொத்தானைக்கு மக்கள் மீண்டும் திரும்பக்கூடியதாகவிருந்தது.

கோத்தாபய ராஜபக்ச அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்ட பின்னர், இப்போதைய அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழுத்தங்களுக்கு அடிபணிந்துள்ளது. சிங்கள மக்களை அங்கிருந்து அகற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது - என்றுள்ளது. (அ-ம-6)

## பிரதேச...

புளியங்குளம் வடக்கு முத்துமாரிநகர் மக்கள் நேற்று உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா வடக்குப் பிரதேச செயலரை இடமாற்றம் செய்யவேண்டும், புளியங்குளம் வடக்கு கிராம அலுவலரை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டும், மக்கள் கேட்ட கேள்விகளுக்கு பிரதேச செயலாளர் பதில் வழங்காமைக்குரிய காரணம் என்ன?, 15 வருடங்களாக முத்துமாரி நகர் 'ஏ புளக்' காணிகளுக்கு காணிப்பத்திரம் வழங்காமைக்குரிய காரணம் என்ன?, எந்தவிதமான குற்றச் செயல்களும் இல்லாமல் எட்டு இளைஞர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தமைக்கான காரணம் என்ன? உள்ளிட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தீர்வு வழங்கப்படும் வரையில் போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-110)

## மேய்ச்சல்தரையை...

டான், முசலி கால்நடை வளர்ப்போர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பண்ணையாளர்கள் தெரிவித்ததாவது:-

புல்லறுத்தான் கண்டல் மேய்ச்சல்தரையை விடுவிக்குமாறு பல்வேறு அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தொடர்ச்சியாக எழுத்துமூலம் வலியுறுத்தி வருகின்றோம். நேரடியாகவும் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளோம். ஆனால், மேய்ச்சல்தரை தொடர்பில் தீர்க்கமான எந்தப் பதிலும் இல்லை.

கால்நடைகளை மேய்ச்சலுக்காக மாந்தை மேற்கு, இலுப்பைக்கடவை பகுதிகளுக்குக் கொண்டுசெல்ல வேண்டியிருக்கின்றது. இதனால் கால்நடை இழப்புகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கின்றது. எனவே எமது இடர்பாட்டைக் கருத்திற்கொண்டு எமது கட்டுக்கரைக்குளத்துக்குட்பட்ட புல்லறுத்தான் கண்டல் பகுதியை மேய்ச்சல் நிலமாக பிரகடனப்படுத்தி அவற்றை உடன் விடுவிக்கவேண்டும் - என்றனர்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மெசிடோ நிறுவனத்தின் தலைவர், நானாட்டான், முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், சிவில் சமூக அமைப்பினர், மதத்தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின் ஒருபகுதியாக மாவட்டச் செயலகத்துக்கு மனுவும் கையளிக்கப்பட்டது. (அ-ம-27)

## போதைப்பாவனை...

பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காலையில் கழிப்பறைக்குச் சென்ற மகன், நீண்ட நேரமாகியும் வெளியே வராததால் சந்தேகம் அடைந்த தாயார், கதவைத் தட்டி மகனை அழைத்துள்ளார். அப்போதும் கதவு திறக்கப்படவில்லை. இதையடுத்து அவர் கதவை உடைத்து உட்சென்றபோது மகன் உணர்வற்ற நிலையில் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துடன் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டார். மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (அ-ம-26-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சியைக் கைப்பற்ற சுமந்திரன் முயற்சி!



## சம்பந்தருக்கு தவராசா கடிதம்

கொழும்பு, ஒக். 27

**தகைமையுள்ள பல்வேறு தமிழ்த் தேசிய ஆளுமைகள் இருக்கத்தக்கதாக நீங்கள் 2010ஆம் ஆண்டு சுமந்திரனை தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக்கி அரசியல் முகவரி கொடுத்தீர்கள். ஆனால் இப்போது அரசியல் ரீதியில் உங்களை ஓரங்கட்டிவிட்டு கட்சியின் மொத்தக் கட்டுப்பாட்டையும் தனது பிடிக்குள் கொண்டு வருவதற்கான அனைத்துவிதமான சூழ்ச்சிகளையும் சுமந்திரன் முன்னெடுக்கின்றார் - இவ்வாறு தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தருக்குக் கடிதம் எழுதியுள்ளார் தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத்தலைவர் கே.வி.தவராசா.**

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் உள்ளதாவது:-

சுமந்திரனின் தன்னிச்சையான முடிவுகளால் தமிழ்த் தேசியம் தேய்ந்து கட்சிக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக கடந்த காலத்தில் நான் உங்களுக்கு பல கடிதங்களை எழுதியிருந்தேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக நீங்கள் அவர் மீது எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்காமையின் விளைவுகளைத்தான் இப்போது பகிரங்கமாக காணக் கிடைக்கின்றது.

2015ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்காவிட்டால், தான் அரசியலை விட்டும் விலகப் போவதாகக் கூறிய சுமந்திரன் இப்போது உங்களைப் பதவிவிலகச் சொல்வது வேடிக்கையானது. நீங்கள் வளர்த்த கடா பகிரங்கமாக பொதுவெளியில் வைத்து உங்களின் மார்பில் பாய்ந்துவிட்டது. திண்ணை எப்போது காலியாகும் என்ற அவரது எதிர்பார்ப்பு பகிரங்கமாகவே வெளிப்பட்டுவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவே நீங்கள் செயற்பட்டீர்கள். அதை இல்லாமல் செய்வதற்காகவே கடந்த உள்ளூராட்சித் தேர்தலுக்காக வேட்புமனுக் கோரப்பட்டபோது த.தே.கூட்டமைப்பைச் சிதைத்து தமிழரசுக் கட்சியை தனிமைப்படுத்தினார். தமிழ்த் தேசியக் கூட்டடைப்பை சுமந்திரன் திட்டமிட்டு சிதறடித்தமையின் நோக்கம் த.தே.கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் இருந்து உங்களைத் தூக்கியெறிவதேயாகும். இப்போது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து உங்களை விலக நிர்ப்பந்தித்து அரசியலில் இருந்து உங்களை முற்றாக அகற்றுவதே அவரது இலக்காகும். அதைத்தான் பகிரங்கமாக அவர் வெளிப்படுத்தி இருக்கின்றார்.

உடல் ரீதியில் நீங்கள் பலவீனமுற்றாலும் மனரீதியில் மிகவும் வலிமையானவர். உங்களின் வலிமையைச் சிதைப்பதற்கே சுமந்திரன் பகிரங்கமாக இவ்வாறான செயற்பாட்டில் இறங்கியுள்ளார்.

உடனடியாகக் கட்சி காப்பாற்றப்பட்டு தமிழ்த் தேசியத்தின் கனவுகளைச் சுமந்த மக்களின் அபிமானமிக்க தமிழ்த் தேசியவாதி ஒருவரைக் கொண்டு தலைமைத்துவத்தைப் பலப்படுத்தி கட்சியை நிலைப்படுத்தா விட்டால் நிச்சயம் கட்சியின் இருள் சூழ்ந்த பக்கத்தை விரைவில் காணவேண்டி வரும். அது எமது இனத்துக்கு இழைக்கப்படும் வரலாற்றுத் துரோகமாகும் - என்றுள்ளது. (அ-ம)

## சிலிண்டர்கள் திருட்டு இருவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணம் நகரில் நூதனமான முறையில் எரிவாயு சிலிண்டர்களைத் திருடிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஹேவா வசந் தலைமையிலான குழுவினரால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 10க்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் மீட்கப்பட்டுள்ளன. கைதானவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள். அவர்கள் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26)

07 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச வீசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
V2 Travels
0768226244
0768226241

## பெரியபுராணபடன நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஒக்.27

சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கம் நடத்தும் பெரியபுராணபடன நிறைவு விழா சுதுமலை விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமான் ஆலய (சுதுமலைசிவன் கோயில்) மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலமொழிக் கற்பித்தல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஆசியுரைகளை சிவன்ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ.சுகுமாரக்குருக்கள், யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை தலைவர் பிரம்ம ஸ்ரீ கலாநிதி ம.பாலகைலாசநாத சர்மாவும் "சமகால வாழ்வியலில் பெரிய புராணம்" எனும் தொனிப்பொருளில் வலிகாமம் வலய இந்துசமய சேவைக் கால ஆலோசகர் சைவப்புலவர் ச.முகுந்தனும் நிறைவுரையை சுதுமலை நாவலர் முன்பள்ளி நிறுவுநர் இ.பேரின்பநாயகம், நன்றியுரையை சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கம் இ.வாமசிவம் ஆகியோரும் ஆற்றவுள்ளனர்.

அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

விருந்தினர்களாக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், யாழ். மாவட்டச் செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் சு.உதயபாலன், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக இந்துகலாசார உத்தியோகத்தர் திருமதி ஜனார்த்தனன் அகல்யா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ய)


## பொதுக்கூட்டம் இன்று

வவுனியா, ஒக். 27

வவுனியா காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சனி தெரிவித்தார். (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 - 12 - 1935



மறைவு 26 - 10 - 2023

### கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்
(சுந்தரண்ணை)

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் நேற்று (26.10.2023) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செம்பொற்சோதி தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் கனகம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் யோகம்மா, பத்மலிங்கம், சண்முகலிங்கம், காலஞ்சென்ற மனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

தொடர்பு : 077 724 7267

cs26724 (Ak.1)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.